# ஷஃபாஅத்

(மாநபியின் மன்றாட்டம்)

ஆசிரியர்

மௌலவி. M.இப்னு முஹ்யித்தீன் காதிரி

வெளியீட்டாளர்

**இரட்டை மஸ்தான் வெளியீட்டகம்**

ஆசார் தைக்கால்

கொண்டிராஜபாளையம்

தஞ்சாவூர்

# இந்நூல் பற்றி

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஷஃபாஅத்<br>(மாநபியின் மன்றாட்டம்)<br>(இப்பிரபஞ்ச ஜீவராசிகளுக்கு கியாமநாள் மஹ்ஷர் மைதானத்தில் நபிகள் பெருமானின் ஷபாஅத் என்ற மன்றாட்டமே கெதி என்று நிலைநாட்டும் நூல்) |
| மொழி | : | தமிழ் |
| நூலின் ஆசிரியர் | : | மௌலவி<br>M.இப்னு முஹ்யித்தீன் காதிரி |
| பதிப்புகள் | : | ஹிஜ்ரி 1435 ரபியுல் ஆகிர் |
| வெளியீடு | : | இரட்டை மஸ்தான் வெளியீட்டகம்<br>ஆசார் தைக்கால்<br>கொண்டிராஜபாளையம்<br>தஞ்சாவூர் - 613 001 |
| தேவைக்கு | : | ''தர்கா'' மாதயிதழ்<br>எண்: 74/176-ஏ, காந்திஜி ரோடு<br>(இரட்டை மஸ்தான் தர்கா எதிரில்)<br>தஞ்சாவூர் - 613 001 |
| தொடர்புக்கு | : | email: razaaksoofi@yahoo.com<br>செல்: 9940586090 |
| நன்கொடை | : | ரூ.30/- மட்டும் |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஷஃபாஅத் பற்றி | 5 |
| 2. | ஷஃபாஅத்திற்கு ஆதாரமான இறை வசனங்களும், நபிமொழிகளும்... | 7 |
| 3. | ஷஃபாஅத் பற்றி ஷாஹ் அப்துல் அஜீஜ் முஹத்திஸ் தெஹ்லவி ரஹ்மதுல்லாஹி அலைஹி | 14 |
| 4. | ஹழ்ரத் ஷாஹ் ரஃபீவுத்தீன் முஹத்திஸ் தெஹ்லவி அவர்களது கொள்கை | 19 |
| 5. | மகாமே மஹ்மூத் என்றால்... | 23 |
| 6. | ஷஃபாஅத் பற்றிய ஹதீஸ்கள் | 25 |
| 7. | ஷஃபாஅத்தை நஸீபாக்கும் நற்செயல்கள் | 31 |
| 8. | மலக்குகள், வலிமார்கள், ஆலிம்கள், நல்லோர்களின் ஷஃபாஅத் | 35 |

# முன்னுரை

“அல்லாஹ்வுடைய வாக்கு சத்தியம்” “அல்லாஹ் தன் வாக்குறுதிக்கு மாறுபுரிய மாட்டான்” எனும் குர்ஆனுடைய வார்த்தையின் படி அல்லாஹ் முழுக்க, முழுக்க சத்தியமானவனாய் இருக்க “அல்லாஹ்வினால் பொய் கூற முடியும்” என அல்லாஹ்வின் தன்மையை வஹ்ஹாபிகள் மறுப்பதுபோல “ஷஃபிஃ” (பரிந்துரை செய்பவர்கள்) எனும் நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களின் தன்மையையும் மறுத்து மக்களை வழிகெடுக்க முயல்கிறார்கள்.கேடுகெட்ட வஹ்ஹாபிகள்.

ஆகவே நாயகம் பெருமானார் “ஷஃபிஃ” என்பது மெய் என்பதை இஸ்லாமியர்களின் உள்ளத்தில் ஆழமாக வேரூன்றச் செய்ய நாம் எடுக்கும் சின்னஞ்சிறு முயற்சிகளின் ஒன்றே இச்சிறு நூல்.

அல்லாஹ், ரசூல் இதனை அங்கீகரித்து திவ்விய “ஷபாஅத்தை” இந்த பாவிகளுக்கும் பாக்கியமாக்கட்டும்.

# ஷஃபாஅத்

*ஷஃபாஅத் பற்றி...*

*அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கை. முஸ்லிம் பாவிகளுக்கு அல்லாஹ்வின் நேசம் பெற்ற, நெருக்கம் பெற்ற நபிமார்கள், வலிமார்களின் ஷஃபாஅத் பரிந்துரை உண்டு. அவர்கள் பெரும் பாவம் செய்திருந்தாலும் சரி, பாவத்தோடு (தவ்பா செய்யாமல்) மரணித்திருந்தாலும் சரி.*

*1. சில முஸ்லிம்கள் கேள்வி, விசாரணையின்றி சுவனம்புக பரிந்துரை செய்யப்படுவர்.*

*2. விசாரணைக்குப்பின் நரகவாதிகள் என தீர்ப்பு வழங்கப்பட்டோர் சுவனம் புக பரிந்துரைக்கப்படுவர்.*

*3. நரகிற்கு அனுப்பப்பட்ட சில முஸ்லிம்கள் பரிந்துரையால் நரகிலிருந்து விடுவிக்கப்பட்டு சுவனம் செல்வர். முஸ்லிம்கள் கூடுதல் அந்தஸ்தைப் பெறுவர்.*

*நபிமார்கள், வலிமார்கள் முஸ்லிமான பெரும்பாவிகளுக்கு பரிந்துரை செய்வார்கள். (அகாயிதுன் நஸஃபிய்யா)*

*ஷஃபாஅத்தை - பரிந்துரையை - மறுப்பது மட்டுமல்ல. சந்தேகிப்பதும் குஃப்ராகும்.*

*நபி சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அன்னவர்களின் பரிந்துரையை மறுப்பவர் அல்லது நன்மை, தீமையை எழுதும் கண்ணியமிக்க வானவர்களை மறுப்பவர் அல்லது இறைதரிசனத்தை மறுப்பவரின் பின் தொழக்கூடாது. ஏனெனில் அவர் காஃபிர் - பஹ்ருர் ராயிக்.*

*தேவ்பந்த் வஹ்ஹாபிகளும் அங்கீகரிக்கும் மஜாலிசுல் அப்ரார் எனும் கிரந்தத்திலும் அவ்வாறே உள்ளது. இதுபற்றி இமாம் ராஜி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தப்சிர் கபீரில் கூறுகிறார்கள்..*

"اجمعت الأمة على أن لمحمد صلى الله عليه وسلم شفاعة فى الآخرة و حمل على ذلك قوله تعالىٰ عسى ان يبعثك ربك مقاماً محمودًا و قوله تعالىٰ و لسوف يعطيك ربك فترضى ثم اختلفوا بعد ذلك فى ان شفاعته عليه السلام لمن تكون اتكون للمؤمنين المستحقين للثواب ام تكون لاهل الكبائر المستحقين للعقاب فذهبت المعتزلة إلى انها للمستحقين للثواب و تاثير الشفاعة فى ان تحصل زيادة من المنافع على ما استحقوه و قال اصحابنا تاثيرها فى اسقاط العذاب عن المستحقين للعقاب و اما بان يشفع لهم فى عرصة القيامة حتى لايدخلوا النار و دخلوا النار فيشفع لهم حتى يخرجوا منها و يدخلوا الجنة و اتفقوا على انها ليست للكفار" (١)

*நிச்சயமாக முஹம்மது சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் மறுமையில் ஷஃபாஅத் (பரிந்துரை) செய்வார்கள் என்பது உம்மத் (அனைவரும் ஏற்றுக் கொண்ட)தின் இஜ்மாஃ. இதற்கு (ஆதாரமாக) "திடனாக தங்களின் ரப்பு தங்களை மகாமே மஹ்மூதில் சேர்த்தருள்வான்." (சூரா பனீ இஸ்ராயீல்) என்ற வசனமும், மேலும் "விரைவில் தங்களின் ரப்பு தங்களுக்கு வழங்குவான். தாங்கள் திருப்தியடைவீர்கள்." (சூராளுஹா) என்ற வசனமும் உள்ளன. பின் நாயகம் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களின் பரிந்துரை*

*யாருக்கு கிடைக்கும்? நன்மைக்குரிய முஸ்லிம்களுக்கா? அல்லது தண்டனைக்குத் தகுதிபெற்ற (முஸ்லிம்) பாவிகளுக்கா? என்பதில்தான் கருத்து வேறுபாடு. முஃதஜிலா (போன்ற வஹ்ஹாபி)கள் நன்மைக்குரிய முஸ்லிம்களுக்கே (நபிகளாரின் பரிந்துரை) உண்டென்கின்றனர். மேலும் அவர்கள் எந்த நற்கூலிக்கு தகுதிபெற்றனரோ அதை பெரிதாக்க ஷஃபாஅத் உண்டாகும். மேலும் நமது (அஹ்லுஸ் ஸுன்னத்வல்) ஜமாஅத்தினர் கூறியுள்ளனர். தண்டனைக்குத் தகுதி பெற்றவர் ஷஃபாஅத்தின் மூலம் பாதுகாக்கப்படுவார். அல்லது கியாம நாளில் ஷஃபாஅத்தினால் நரகில் நுழைக்கப்பட மாட்டர். மேலும் நரகில் நுழைக்கப் பட்டோர் (சிலர்)* ஷஃபாஅத்தினால் அதிலிருந்து வெளியேற்றி சுவனம் *செல்வார்கள். ஷஃபாஅத் காஃபிருக்கு இல்லை என்பது அனைவரின் ஏகோபித்த கருத்தாகும். - தப்சீர் கபீர், பாகம்-1, பக்கம்-503, 504.*

## ஷஃபாஅத்திற்கு ஆதாரமான இறை வசனங்களும், நபிமொழிகளும்...

*ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு ஆஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அறிவிக்கிறார்கள்.*

**عن عبد الله بن عمرو بن العاص ان النبى صلى الله عليه وسلم تلاقول الله عزوجل فى ابراهيم "رب انهن اضللن كثيرا من الناس فمن تبعنى فإنه منى و من عصانى فإنك غفور رحيم" و قال عيسىٰ عليه السلام إن تعذبهم فإنهم عبادك و ان تغفرلهم فإنك انت العزيز الحكم" فرفع يديه و قال اللهم امتى امتى و بكى فقال الله عزوجل يا جبرئيل اذهب الى محمد و ربك اعلم فسئله ما يبكيك فأتاه جبرئيل عليه السلام فسأله فأخبره رسول الله صلى الله عليه وسلم بما قال و هو اعلم فقال الله يا جبريل اذهب إلى محمد فقل انا سنرضيك فى امتك و لا نسوك**

நபி சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள்.. இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கேட்டதாக வந்துள்ள..

என் ரப்பே! அச்சிலைகள் பலரை வழிகெடுத்து விட்டன. என்னைப் பின்பற்றியவர்கள் என்னைச்சார்ந்து மேலும் (என்னை நிராகரித்து) எனக்கு மாறு புரிந்தவர்களை நீ மன்னிப்பாயாக. நீயே கருணை மிக்கவன். மேலும் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறியதாக வந்துள்ள.. அவர்களை நீ தண்டித்தால் (யா அல்லாஹ்!) அவர்கள் உனது அடியார்கள். மேலும் அவர்களை நீ மன்னித்தால் நிச்சயமாக நீ மிகைப்பவன். நுட்பம் மிக்கவன். ஆகிய திருவசனங்களை ஓதிவிட்டு தம் திருக்கரங்களை உயர்த்தி.. யா அல்லாஹ்! எனது உம்மத். எனது உம்மத் என்று கூறி அழுதார்கள். அப்போது அல்லாஹ் கூறினான்.. ஜிப்ரயீலே! முஹம்மத் (சல்லல்லாஹு அலைஹி வசல்லம்) அவர்களிடம் சென்று.. தங்களின் ரட்சகன் நன்கறிபவன். தாங்கள் ஏன் கண் கலங்குகிறீர்கள்? என்று கேளுங்கள். ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அண்ணலாரிடம் வந்து வினவி., (அல்லாஹ் நன்கறிபவன்.) அண்ணலார் கூறியவற்றை அல்லாஹ்விடம் அறிவித்தனர். அப்போது அல்லாஹ் கூறினான்.. ஜிப்ரீலே! முஹம்மத் (சல்லல்லாஹு அலைஹி வசல்லம்) அவர்களிடம் சென்று தங்களின் உம்மத்தினரின் (மன்னிப்பு) விஷயத்தில் நிச்சயமாக யாம் தங்களை திருப்திப் படுத்துவோம். மேலும் தங்களை வருந்தச் செய்ய மாட்டோம் என்று கூறிவிடுங்கள். (நூல்-முஸ்லிம்).

ஷஃபாஅத் விஷயத்தில் இந்த ஹதீஸ் ஸ்திரமான சான்றாக உள்ளது.

*அல்லாஹ் கூறுகிறான்..*

"لايملكون الشفاعة إلا من اتخذ عند الرحمن عهدًا"

*ரஹ்மானிடம் உறுதி (ஒப்பந்தம்) செய்துகொண்டோரைத் தவிர (வேறு எவரும்) ஷஃபாஅத் செய்ய உரிமை பெற மாட்டார்கள்.*

*- சூரா மர்யம்.*

*இமாம் ராஜி ரஹிமஹுல்லாஹ் கூறுகின்றனர்.*

"ان المجرمين لا يستحقون ان يشفع لهم غيرهم إلا اذا كانوا قد اتخذوا عند الرحمن عهدا فكل من اتخذ عند الرحمن وجب دخوله فيه و صاحب الكبيرة اتخذ عند الرحمن عهدا وهو التوحيد و الاسلام فوجب ان يكون داخلا تحته

*நிச்சயமாக பாவிகளுக்கு மற்றவர்கள் பரிந்துரை செய்ய உரிமையில்லை. தவிர ரஹ்மானிடத்தில் அவர்கள் உறுதி (ஒப்பந்தம்) செய்திருந்தால் (ஷபாஅத் பெற உரிமை பெறுவர்) ஆக ரஹ்மானிடம் உறுதிசெய்த அனைவருமே ஷஃபாஅத் பெறுவது கட்டாயமானது. மேலும் (அப்படிப் பார்த்தால்) பெரும்பாவி(யும்) ரஹ்மானிடம் ஏகத்துவ, இஸ்லாமிய உடன்படிக்கை (உறுதி) செய்துள்ளதால் அவரும் ஷஃபாஅத்திற்கு தகுதி பெறுவது அவசியமாகி விட்டது.* *- தப்சீர் கபீர். பாகம்-1, பக்கம்.507.*

அல்லாஹ் கூறியுள்ளான்.

**فما تنفعهم شفاعة الشافعين**

பரிந்துரைப்பவர்களின் பரிந்துரை அவர்களுக்கு பயன் தராது - சூரா முத்தஸ்ஸிர்.

காஃபிர்களைப் பற்றி இவ்வசனம் இவ்வாறு கூறுகிறது. ஆக பரிந்துரை காஃபிர்களுக்கு பயனளிக்காது என்பதிலிருந்து முஸ்லிம்களுக்கு பயன்தரும் என்பது தெளிவாகும் விஷயம்.

இறைவனின் திருவசனம்.

**فاستغفر لذنبك و للمؤمنين و المؤمنات**

மேலும் தங்களுக்கு நெருக்கமானவர்களுக்கும், இன்னும் முஸ்லிமான ஆண்களுக்கும், இன்னும் முஸ்லிமான பெண்களுக்கும் பிழை பொறுக்கத் தேடுங்கள் - சூரா முஹம்மத் (சல்லல்லாஹு அலைஹி வசல்லம்)

இமாம் ராஜி ரஹிமஹுல்லாஹ் விளக்கம் தருகிறார்கள்.

"انه تعالىٰ امر محمداً بان يستغفر لكل المؤمنين و المؤمنات و قد بينا فى تفسير قوله تعالىٰ الذين يؤمنون بالغيب ان صاحب الكبيرة مؤمن و اذا كان كذلك ثبت ان محمدا صلى الله تعالىٰ عليه وسلم استغفر لهم و اذا كان كذلك ثبت ان الله تعالىٰ قد غفرلهم إلا لكان الله تعالىٰ قد امره بالدعاء ليرد دعائه فيصير ذلك محض التحقير و الايذا وهو غير لائق بالله تعالىٰ و لا بمحمد صلى الله تعالىٰ عليه وسلم فدل على ان الله تعالىٰ لما امر محمدا بالاستغفار لكل العصاة فقد استجاب دعائه و ذلك إنما يتم لو غفرلهم و لا معنى الشفاعة الا هذا" (١)

அல்லாஹ¬ சுபுஹானஹ¬வதஆலா பெருமானார் முஹம்மது சல்லல்லாஹ¬ அலைஹி வசல்லம் அன்னவர்களுக்கு எல்லா முஸ்லிம்களுக்காகவும் மன்னிப்பை துஆ கேட்கும்படி அல்லாஹ் உத்தரவிட்டுள்ளான்.

மறைவானதை நம்பக் கூடியவர்கள் என்ற இறைமறை வாசகத்திற்கு விளக்கமளிக்கையில் பெரும்பாவிகளும் முஸ்லிம்கள்தான் என்பதை யாம் தெளிவுபடுத்தியுள்ளோம். ஆக அவர்களும் முஃமீன்கள் தான் என்பது உறுதியாகும்போது அவர்களுக்காகவும் பெருமானார் சல்லல்லாஹ¬ அலைஹி வசல்லம் பாவமன்னிப்புக் கோருவார்கள் என்பதும் உறுதியாகிறது. அவர்கள் கோரினால் அல்லாஹ் நிச்சயம் பாவங்களை மன்னிப்பான். அண்ணலாரின் துஆவை ரத்து (மறுப்பு) செய்வதாக இருந்தால் துஆச் செய்யும் படியே அல்லாஹ் உத்தரவிட்டிருக்கமாட்டான். அவ்வாறு (ரத்து) செய்வது இழிவும், நோவினையுமாகும். இது அல்லாஹ் ரசூலின் அந்தஸ்திற்கு உகந்ததல்ல. துஆவிற்கு உத்தரவிட்டால் நிச்சயம் அல்லாஹ் அண்ணலாரின் துஆவை ஏற்பான். ஆக இது (துஆவை ஏற்பது) அவர்களை மன்னிப்பது தானே? அல்லாஹ் அவர்களை மன்னிப்பான் எனும்போது ஷஃபாஅத்திற்கு வேறென்ன அர்த்தமிருக்க முடியும்? - தப்சிர் கபீர். பாகம்-1, பக்கம்.509.

அல்லாஹ் கூறியுள்ளான்.

و لـو أنهـم اذ ظلموا انفسهم جاؤك فاستغفروا الله و

استغفرلهم الرسول لوجدوا الله توابا رحيما

(நாயகமே) அவர்கள் தங்களுக்குத் தாங்களே அநீதமிழைத்து தங்களிடம் (மனம் வருந்தி) வந்தால் அல்லாஹ்விடம் அவர்கள் பிழை பொறுக்க வேண்டினால் மேலும் ரசூலும் அவர்களுக்காக பிழைபொறுக்க தேடினால் நிச்சயமாக அல்லாஹ்வை அவர்கள் தவ்பாவை ஏற்பவனாக, கருணையாளனாகப் பெற்றுக் கொள்வார்கள் - சூரா நிஸா.

இமாம் ராஜி கூறுகின்றனர்..

الاية تدل على ان الرسول متى استغفر للعصاة و الظالمين فإن الله يغفر لهم و هذا يدل على ان شفاعة الرسول فى حق اهل الكبائر مقبولة فى الدنيا فوجب ان تكون مقبولة فى الآخرة لانه لا قائل بالفرق

இவ்வசனம் அறிவிப்பது யாதெனில்.. எப்போது ரசூல் (சல்லல்லாஹு அலைஹி வசல்லம்) அவர்கள் பாவிகளுக்காக பாவமன்னிப்புக் கோருவார்களோ அல்லாஹ் அவர்களை மன்னிக்கிறான். மேலும் இது அறிவிப்பதாவது.. உலகில் பெருமானின் துஆவினால் பெரும்பாவிகள் மன்னிக்கப்படுவர் எனும்போது மறுமையிலும் அண்ணலார் அவர்களுக்காக ஷபா அத் செய்தால் ஏற்கப்படும். இதில் கருத்து வேறுபாடு கிடையாது.

- தப்சீர் கபீர். பாகம்-1, பக்கம்-509.

ஷஃபாஅத் சம்பந்தமாக பல வசனங்கள் வந்துள்ளது போல பற்பல ஹதீஸ்களும் ஷஃபாஅத்தை உண்மைப் படுத்துகிறது, உறுதிப்படுத்துகிறது.

ஹழ்ரத் அனஸ் பின் மாலிக் ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள். நாயகம் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் கூறியுள்ளார்கள்..

شفاعتى لاهل الكبائر من امتى

என் உம்மத்தின் பெரும்பாவிகளுக்கு(ம்) என் பரிந்துரை உண்டு.

- நூல்கள் அபூதாவூத், திர்மிதி, இப்னு மாஜா, அஹமத்.

ஹழ்ரத் அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்.

"لكل نبى دعوة مستجابة فتعجل كل نبى دعوته و انى اختبأت دعوتى شفاعة لأمتى إلى يوم القيامة فهى نائلة ان شاء الله من مات من امتى لايشرك بالله شيئاً"

நாயகம் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் கூறினார்கள் "ஒவ்வொரு நபிக்கும் அங்கீகரிக்கப்படும் ஒரு துஆ உண்டு." எல்லா நபிமார்களும் தமது துஆக்களை சீக்கிரமாக (உலகிலேயே) கேட்டுவிட்டனர். மேலும் நான் என் துஆவை கியாம நாளில் என் உம்மத்திற்கு பரிந்துரை செய்வதற்காக வைத்துள்ளேன். இன்ஷா அல்லாஹ் அல்லாஹ்விற்கு எந்த ஒன்றையும் இணையாகக் கருதாது என் உம்மத்தாக மரணித்த ஒவ்வொருவரும் அதைப் பெறுவார். (ஷஃபாஅத் பெறுவார்). - நூல்கள் - புகாரி - முஸ்லிம், திர்மிதீ, இப்னுமாஜா.

முஸ்லிமாக மரணித்த அனைவருக்கும் (பெரும்பாவிக்கும்) ஷஃபாஅத் உண்டு என்பதற்கு இது தக்க, போதுமான சான்றுகளாகும்.

இமாம் ராஜி ரஹிமஹுல்லாஹ் கூறுகின்றார்கள்.

"كل واحد من هذه الاخبار و ان كان مرويا بالآحاد إلا انها كثيرة جداً و بينهما قدر مشترك واحد وهو خروج اهل العقاب من النار بسبب الشفاعة فيصير هذا المعنى مرويا على سبيل التواتر فيكون حجة .

*இதுபோன்ற, இன்னும் ஒரு நபரே ரிவாயத் செய்யக் கூடியது உட்பட ஏராளமான ஹதீஸ்கள் வந்துள்ளன. அவைகளுக்கிடையே போதிய பொருத்தம் உள்ளது. மேலும் ஷஃபாஅத்தின் நோக்கம் பாவிகளை நரகிலிருந்து விடுவிப்பது எனும் அர்த்தத்தில் அந்த (ஒரு நபரே அறிவிக்கும்) ஹதீஸ்கள் (பலநபர் அறிவிக்கும்) முதவாதிரான ஹதீஸ்களைப் போலவாம். ஆகவே அது (ஸ்திரமான) ஆதாரமாக அமைந்துவிடுகிறது.*

*- நூல் - தப்சிர் கபிர். பாகம்-1, பக்.512, 513.*

*அவனது அனுமதியின்றி அவனிடம் யார் பரிந்து பேசுவார். (சூரா பகரா) எனும் வசனத்தின் விளக்கத்தில் இமாமவர்கள் குறிப்பிடுகிறார்கள்..*

*மக்கா முஷ்ரிக்குகள் தாங்கள் வணங்கும் சிலைகள் தங்களுக்காக அல்லாஹ்விடம் பரிந்து பேசும் என நம்பி வந்தனர். அது தவறான நம்பிக்கை என இந்த வசனத்தில் அல்லாஹ் மறுப்புச் சாற்றினான். அதாவது அல்லாஹ்வின் உத்தரவும், அனுமதியும் யாருக்குண்டோ அவர்களே ஷபாஅத் செய்ய முடியுமென்பதாகும்.*

*- தப்சீர் கபீர்.*

## ஷஃபாஅத் பற்றி ஷாஹ் அப்துல் அஜீஜ் முஹத்திஸ் தெஹ்லவி ரஹ்மதுல்லாஹி அலைஹி

*அன்னார் தமது திருமறை விளக்கம் ஃபத்ஹுல் அஜீஜில் "அந்த நாளில் எந்த ஒரு ஆன்மாவும் எந்த ஆன்மாவிற்கும் எதையும் பகரமாக்கிட முடியாது." மேலும் அந்நாளில் பரிந்துரை ஏற்கப்படாது என்ற சூரா பகரா வசனத்தின் விளக்கத்தில் கூறியுள்ளனர்.. எவ்வளவு தான் நன்றி செலுத்திய, இறைநெருக்கம் பெற்ற ஆத்மாவாக இருந்தாலும் அது குஃப்ர் செய்த ஆத்மாவிற்கு எதுவும் செய்ய (முடிய)ாது. அது*

பெற்ற பிள்ளையாக இருந்தாலும் சரி, இறைநெருக்கம் பெற்றவர்களின் பரிந்துரை காஃபிர் விஷயத்தில் ஏற்கப்படாது. முஃதஜிலா (போன்ற வஹ்ஹாபிகள்) இந்த வசனத்தைக் கொண்டு கியாம நாளில் ஷஃபாஅத்தே கிடையாது என்கின்றனர். ஆனால் இவ்வசனம் காஃபிர்களுக்குத்தான் ஷஃபாஅத் கிடையாது எனக் கூறுவதை அவர்கள் விளங்கவில்லை. ஷஃபாஅத் உண்டென்று கூறும் பல வசனங்கள், பற்பல ஹதீஸ்கள் உண்டு. ஆகவே, பொதுவாக ஷபாஅத் இல்லை எனக் கூறும் இவ்வசனத்தை பொதுவாகக் கொள்ள முடியாது. அதனைக் குறிப்பாக்குவது அவசியமாகும். காஃபிர்களுக்கு ஷஃபாஅத் இல்லை என்பதே அஹ்லுஸ்ஸுன்னத் வல்ஜமா அத்தின் கொள்கை. காஃபிர்களைத் தவிர எல்லா முஸ்லிம்களும் ஷஃபாஅத்திற்கு தகுதிபெற்றோர் என முதவாதிர் எனப்படும் பலரும் அறிவிக்கும் ஹதீஸ்கள் தெளிவு செய்கின்றன. இவ்வசனம் வரும் இடத்திற்கு இதுவே சரியான பொருளாகும். ஏனெனில் இவ்வசனங்களில் தாம் காஃபிரான போதும் தமது முன்னோர்கள், பெரியார்கள் தங்களுக்காக மறுமையில் பரிந்து பேசுவர் என நினைத்துக் கொண்டிருந்த காஃபிர்களுக்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. பரிந்துரையின் யதார்த்தம் என்னவென்றால் சம்பூரணம் பெற்ற நல்லோர்களின் சம்பூரணத்துவம் (மக்கள் முன்) பறைசாற்றப்பட வேண்டும் எனவும், சம்பூரணம் பெற்றோர் தமது சம்பூரணத்தைக்கொண்டு குறையுள்ள தம்மைச் சார்ந்தோரை நிறைவு செய்யவேண்டும் என்பதற்காகவாகும்.

### ஷஃபாஅத்தின் அடிப்படை இரு விஷயங்கள் :

1. சம்பூரணமிக்க நல்லோர்களின் சம்பூரணத்துவம் (நற்பெயர், கீர்த்தி) பறைசாற்றப்படுவது. இது

அல்லாஹ்வினால் கியாம நாளில் அவர்கள் கௌரவிக்கப்படுவது. இது இறைவனது வாக்குறுதி. இதையே ஷரீஅத் 'இத்ன்' அனுமதி என்ற வார்த்தையிலிருந்து விளக்கம் கொள்கிறது.

2. (குறைபாடுள்ளவர்களின் குறை சம்பூரணம் பெற்றவர்களால் நிவர்த்தியாவது) குறையுள்ளோர் சம்பூரணம் பெற்றவர்களை ஈமானும், சரியான கொள்கையுமில்லாமல் பின்பற்றுவது சாத்தியமில்லை. எனவே தான் காஃபிர்கள், முனாஃபிக்குகளுக்கு ஷஃபாஅத் (பரிந்துரை) இல்லை.

மேலும், و الذين أمنوا و عملوا الصالحات اولئك اصحاب الجنة هم فيها خالدون

"இன்னும் ஈமான் கொண்டு மேலும் நற்செயல்கள் புரிந்தோர் அவர்கள் சுவனவாதிகள் அவர்கள் அதிலே நிரந்தரமாக தங்கியிருப்பவர்கள்" என்ற (சூரா பகரா) வசனத்தின் விளக்கத்தில் குறிப்பிடுகிறார்கள். சஹாபாக்களும், தாபிஈன்களும் விளக்கியுள்ள சரியான மத்ஹப் (வழிமுறை), மேலும் அஹ்லுஸ்ஸுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கையும் இதுவே. அதாவது, தவ்பா செய்யாமல் மரணித்திருந்தாலும் பெரும்பாவி உடையவரே மன்னிப்பிற்கு தகுதி. (எனவே, அவருக்காக மற்ற முஸ்லிம்களைப் போலவே ஜனாஸா தொழுகை நடத்தப்படும். பாவமன்னிப்புக் கோரப்படும். சதகாக்கள் நன்மைகள் (அவர் பெயரில் ஈசால் சவாபாக) செய்யப்படும். அவர் விஷயத்தில் நாயகம் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களின் பரிந்துரை கிடைப்பதை, அவருக்கு அல்லாஹ் கருணை புரிவதை நம்பிக்கை கொள்ளவேண்டும். (உறுதிகொள்ள வேண்டும்.) அல்லாஹ் தனது எல்லையற்ற கருணையால்

*அல்லது நாயகம் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களின் பரிந்துரையால் சில பெரும்பாவிகள் மன்னிப்பான். எனினும் சிலர் தண்டிக்கப்படலாம் என்றாலும் பெரும்பாவம் செய்த முஸ்லிம்கள் நரகில் நிரந்தரமாக இருக்க மாட்டார்கள். ஏனெனில் காஃபிர்களே நிரந்தரமாக நரகில் இருப்பார்கள்.இன்னும்*

ربنا وابعث فيهم رسولا

*"'எங்கள் ரப்பே!' அவர்களில் ஒரு அருட்தூதரை அனுப்புவாயாக!"(சூரா பகரா) என்ற வசனத்தின் கீழ் எழுதுகின்றனர்.. ஹதீஸில் வந்துள்ளது.. நான் என் உம்மத்தில் (அஹ்லு பைத்துகளான) என் குடும்பத்தினருக்கு ஷஃபாஅத் செய்வேன். பிறகு பனூஹாஷிம் கோத்திரத்தினருக்கு பின் குறைஷிகளுக்கு, பின்பு அடுத்தடுத்த தரத்தில் உள்ளவர்களுக்கு என பெருமானார் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் கூறினார்கள்.*

*சூரா பகராவின் சிறப்புகளைக் குறிப்பிடும்போது எழுதுகின்றனர்..*

*பிரபலமான ஹதீஸில் வந்துள்ளது..*

*"சூரா பகரா, சூரா ஆல இம்ரான் இரண்டும் கியாம நாளில் இரு மேகங்களைப்போல வரும். அவ்விரண்டின் மத்தியில் ஒளியால் கோடுகிழிக்கப்பட்டிருக்கும். அவ்விரண்டும் (விண்ணில்) பறவைகள் அணிவகுத்து(ப் பறந்து) வருவதுபோல வரும். தம்மை ஓதியவருக்காக பரிந்துரை செய்து, உறுதியோடு நின்று போராடி அவரை சுவனத்தில் சேர்த்துவிடும்."*

‘மேலும் و عهدنا إلى ابراهيم و

اسماعيل ان طهرا بيتى للطائفين و العاكفين و الركع السجود

“தவாஃப் செய்வோருக்காக, மேலும் (தங்கி) இஃதிகாஃப் இருப்போருக்காக இன்னும் ருகூஃ, சுஜூத் செய்யக்கூடிய (தொழக்கூடிய)வர்களுக்காக என் இல்லத்தை சுத்தமாக வைத்துப் பராமரிக்கும்படி நாம் (நபி) இப்ராஹீம் மற்றும் (நபி) இஸ்மாயீல் (அலைஹிமஸ்ஸலாம்) ஆகியோரிடம் உடன்படிக்கை வாங்கினோம். (சூரா பகரா) என்ற வசனத்தின் விளக்கத்தில் எழுதுகின்றார்கள்.. இப்னு மர்தவியா, அஸ்ஃபஹாயீ, தைலமீ ஆகியோர் ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரழியல்லாஹுஅன்ஹுவிடமிருந்து நகல் செய்துள்ளனர்.

நாயகம் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அன்னவர்கள் கூறினார்கள். கியாம நாளில் கஃபாவை வானவர்கள் மாப்பிள்ளையை அலங்கரித்து அழைத்து வருவதைப் போல அலங்கரித்து மஹ்ஷர் மைதானத்திற்கு கொண்டு வருவார்கள். என் கப்ரு ஷரீபைக் கடந்துசெல்லும்போது கஃபா அஸ்ஸலாமு அலைக யா முஹம்மத் என்று கூறும் நான் வ அலைகஸ் ஸலாம் யாபைத்தல்லாஹ் என்று கூறி உன்னிடம் என் உம்மத்தினர் எவ்விதம் நடந்து கொண்டனர்? நீ அவர்களிடம் (இப்போது) எவ்விதம் நடந்துகொள்ளப் போகிறாய்? என்று கேட்பேன். அப்போது கஃபா பதில் கூறும்..யாரஸூலல்லாஹ் (சல்லல்லாஹு அலைஹி வசல்லம்) தங்களின் உம்மத்தினரில் என்னை சந்திக்க வந்தவருக்கு நான் பொறுப்புதாரி. அவருக்கு நான் பரிந்துரை செய்வேன். மேலும் என்னை சந்திக்க வராத தங்களின் உம்மத்தினருக்காக தாங்கள் பொறுப்பேற்று ஷஃபாஅத் செய்யுங்கள்.”

## ஹழ்ரத் ஷாஹ் ரஃபீஉத்தீன் தெஹ்லவி அவர்களது கொள்கை

அன்னார் கூறுகின்றனர்.

நாயகம் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் தங்களின் உம்மத்தோடு மற்ற நபிமார்கள் தத்தமது உம்மத்தினரோடு (மஹ்ஷர் மைதானத்திற்கு) வருவ அமளி, துமளியால் அனைவரின் பார்வையும் வான்நோக்கி இருக்கும்.

என்று கூறிவிட்டு மேலும் கியாம நாளின் சில அமளிகளை கூறிய பின் எழுதுகின்றார்கள்.

கடைசியில் மக்கள் அல்லோலப்பட்டு ஹழ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் வந்து.. அல்லாஹ் தங்களை மனிதகுலத் தந்தையாக, தனது திருக்கரத்தால் படைத்து, தன் வானவர்களை சுஜூது செய்யவைத்து தனது சுவனபதியில் வைத்து, தங்களுக்கு அனைத்து நாமங்களையும் கற்பித்து சிறப்பித்தான். தாங்கள் எங்களுக்காக பரிந்துரை செய்யுங்கள் என்று கோருவர். அப்போது ஹழ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் கூறுவர். அல்லாஹ் இப்போது கடுமையான கோபத்தில் உள்ளான். இதன் முன் இவ்வாறு கடுங்கோபங் கொண்டதில்லை. நானோ அல்லாஹ் தடுத்த கனியை புசித்து விட்டேன். என்னிடம் ஏற்பட்ட தடுமாற்றத்தின் காரணமாக நான் மிகுந்த அச்சத்தில் உள்ளேன். நான் ஷஃபாஅத் செய்ய இயலாத நிலையில் உள்ளேன். நீங்கள் நூஹ் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் போய் முறையிடுங்கள் என்பார்கள்.

இவ்வாறாக ஒவ்வொரு நபியிடமும் போக அவர்கள் தத்தமது பிரச்சினைகளைச் சொல்லி தமது இயலாமையை எடுத்துரைப்பார்கள்.

இந்த நீண்ட விளக்கத்தை முடித்தபின் ஷாஹ் ரபீவுத்தீன் சாஹிப் எழுதுகின்றார்கள்.

பிறகு மக்கள் பெருமானார் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அன்னவர்களிடம் வந்த தாங்கள் அல்லாஹ்வின் ஹபீப். அல்லாஹ் உலகிலேயே தங்களின் பரகத்தால் மன்னிப்பை வழங்கியுள்ளான். இன்று அல்லாஹ் மற்ற அனைவரின் மீதும் கோபங்கொண்டாலும் தங்களின் மீது கோபப்பட மாட்டான். தாங்கள் தான் இறுதி நபி, நபித்துவத்தின் முத்திரை. தாங்களும் கைவிட்டால் நாங்கள் நிர்க்கதியற்றுப் போவோம். தாங்கள்தான் எங்களுக்காக ஷஃபாஅத் செய்யவேண்டும் என கோரிக்கை வைப்பார்கள். அப்போது கருணைக்கடல் கண்மணி நாயகம் முஹம்மத் முஸ்தஃபா சல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வசஹ்பிஹி வசல்லம் அன்னவர்கள்.. ஆம். இன்று நான் அதற்காகத்தான் உள்ளேன். இன்று ஷஃபாஅத் செய்வது என் உரிமையும், பொறுப்புமாகும் என்று கூறி ஷஃபாஅத் செய்ய முன்வருவர். நாயகம் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் இறை சன்னிதானத்தில் சிரம் பணிவர். அப்போது அல்லாஹு ரப்புல் இஜ்ஜத் முஹம்மதே! ஹபீபே! அண்ணலே! தங்கள் தலையை உயர்த்துங்கள். தங்களின் கோரிக்கையை நான் செவிமடுக்கிறேன். தங்களின் வேண்டலை நான் நிறைவேற்றுகிறேன். தங்களின் பரிந்துரையை நான் கபூல் செய்கிறேன் என்பான். பெருமானார் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அன்னவர்கள் தம் முபாரக்கான சிரம் உயர்த்தி இதுவரை எவருமே புகழ்ந்திராதவாறு இறைப்புகழ் பாடுவர். பிறகு கூறிடுவர். யா அல்லாஹ்! இன்று நீ என்னை எல்லா விதத்திலும் திருப்திப்படுத்துவாய் என்பதாக. உலகில்

ஹஜ்ரத் ஜிப்ரீல் உன் வாக்கை என்னிடம் சமர்ப்பித்தார். இப்போது நீ அந்த வாக்குறுதியை நிறைவேற்றித்தர வேண்டுகிறேன். அப்போது அல்லாஹ் கூறுவான்.. ஜிப்ரீல் மெய்யே கூறினார். அவர்கள் எப்போதும் தவறுரைத்ததில்லை. இன்று நான் தங்களை திருப்தி செய்வேன். தங்களின் பரிந்துரை ஏற்பேன்.

பின் அண்ணலார் ஷஃபாஅத் செய்வார்கள். அது ஏற்கப்படும்.

இதுவும் நீண்ட, நெடிய விளக்கமாகும். அதற்குப் பிறகு ஷாஹ் சாஹிப் எழுதுகின்றார்கள்.

பிறகு நபி சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அன்னவர்கள் தமது திருக்கரத்தால் சுவனத்தின் கதவுகளைத் திறந்து மக்களை சுவனபதிக்கு அனுப்பி வைப்பார்கள். பிறகு தனது உம்மத்தைப் பற்றிக் கேட்பார்கள்.. அப்போது சுவனவாதிகளில் 4ல் 1 பகுதியினர் அண்ணலாரின் உம்மத்தாக இருப்பார்கள். பிறகு இன்னும் ஆயிரக்கணக்கான நபர்கள் தங்களது உம்மத்தானவர்கள் நரகில் இருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படும். இதைக்கேட்ட அகில அருட்கொடையான, உம்மத்தை உயிர் மூச்சாக நேசிக்கும் உத்தமத் திருநபிக்கு சொல்லொனா துயரும், கவலையும் ஆட்கொண்டுவிடும்.

இறை சன்னிதானத்தில் வந்து இறைவ. எம்பெரும! என் உம்மத்தை நரகிலிருந்து காப்பாயாக. விடுதலை நல்குவாயாக என்று கோருவார்கள். பிறகு இறைவனின் தரப்பிலிருந்து ‘எவரது உள்ளத்தில் அணுவளவும் ஈமான் உள்ளதோ அவரை நரகிலிருந்து வெளியாக்கி விடுங்கள்’ என உத்தரவு வரும்.

பின் பெருமானார் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அன்னவர்களைத் தொடர்ந்து மற்ற

*நபிமார்களும் (அலைஹிமுஸ்ஸலாத்து வஸ்ஸலாம்) ஷஃபாஅத் செய்வார்கள். பிறகு பெருமானார் அல்லாஹ்விடம் அனுமதிபெற்று நரகின் விளிம்பிற்கு மலக்குகளோடு வந்து என் நேசம் மிக்கோரே! உங்களின் நேசம் மிக்கோர், நண்பர்கள், மதிப்பிற்குரியோர் யாரும் நரகில் உள்ளனரா என நினைவுபடுத்திக் கூறுங்கள் இந்த வானவர்கள் அவர்களை நரகிலிருந்து வெளியாக்கி விடுவார்கள் என்று கூறி அங்கிருந்தும் தன் உம்மத்தை நரகிலிருந்து விடுவிப்பார்கள்.*

*அத்துடன் ஷஹீதுகள் 70 நபர்களுக்கு பரிந்துரை செய்யவும், ஹாஃபிள்கள் பத்து நபர்களுக்கு பரிந்துரை செய்யவும், உலமாக்களும், வலிமார்களும் அவரவர்களின் அந்தஸ்துக்குத்தக்க பரிந்துரை செய்ய அனுமதிக்கப்படுவார்கள். அவர்களும் ஆயிரக்கணக்கான நபர்களுக்கு பரிந்துரை செய்வார்கள். பிறகும் பெருமானார் தமது உம்மத்தின் நிலைகளைக் கேட்டுக் கேட்டு மீண்டும் மீண்டும் பரிந்துரை செய்துகொண்டே இருப்பார்கள். எள் முனையளவு ஈமான் இருந்தாலும் அவரை நரகிலிருந்து விடுதலை செய்யுங்கள் என அல்லாஹ் உத்தரவிடுவான்.*

*பெருமானார் சல்லல்லாஹுﷺ அலைஹி வசல்லம் அன்னவர்கள் தம் சமுதாய வலிமார்கள், உலமாக்களிடம் உங்களுக்குத் தெரிந்தோர் யார்-யாரென நினைவுபடுத்தி யாரும் நரகிலிருந்தால் சொல்லுங்கள் என்று கூறியவாறு ஆயிரக்கணக்கான நபர்களை நரகிலிருந்து விடுதலை செய்வார்கள்.*

## மகாமே மஹ்மூத் என்றால்...

அல்லாஹ் கூறுகிறான்..

عسى ان يبعثك ربك مقامًا محمودًا.

விரைவில் (நாயகமே!) தங்களை தங்களின் ரப்பு மகாமே மஹ்மூதில் சேர்ப்பிப்பான்.

இந்த மகாமே மஹ்மூத் (புகழ் ஸ்தானம்) என்பதற்கு ஷஃபாஅத் (பரிந்துரை) என விளக்கம் காணப்பட்டுள்ளது.

இதுபற்றி பல ஹதீஸ்கள் வந்துள்ளன.

ان المقام المحمود هو مقامه عليه السلام للشفاعة و هو مذهب السلف من الصحابة و التابعين و عامة ائمة المسلمين و بذلك جاء تفسيره فى صحيح الاخبار عنه عليه السلام و جائت مقالة فى تفسيرها شاذة عن بعض السلف بحيث لا يثبت اذ لم يعضدها صحيح اثر و لاسديد النظر و لو صحت لكان تاويل غير مستنكرة لكن ما فسره النبى صلى الله عليه وسلم فى صحاح الآثار برد وجوده فلايجب ان يلتفت إليه مع أنه لم يأت فى كتاب و لاسنة و لا اتفقت على المقال امة" (٢)

“மகாமே மஹ்மூத் என்பது நாயகத்தின் ஷஃபாஅத் ஸ்தானமாகும் என்பதே சஹாபாக்கள், தாபிஈன்கள், முஸ்லிம் அறிஞர்களின் கருத்தாகும். ஹதீஸ்களும் மகாமே மஹ்மூதை மகாமே ஷஃபாஅத் என்றே விளக்குகின்றன. சிலர் மட்டும் வேறு கருத்துகளைக்

கூறியுள்ளனர். எனினும் அவை ஹதீஸின் படியோ, சரியான கருத்தாகவோ இல்லை. அக்கருத்துகள் சரிதான் என்று கொண்டாலும் அவை நமக்கு முரண்படும் கருத்துக்களல்ல. ஆனால் ஹதீஸில் குர்ஆன் வசனத்திற்கு விளக்கம் வந்துவிட்டபின் நாம் மற்ற விளக்கங்களை ஏற்கக்கூடாது. அத்தோடு அந்த ஒருசிலரின் கருத்துக்கு குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஃ ஆதாரம் கிடையாது. (நூல்-கிதாபுஷ் ஷஃபா) காளீ இயாழ் ரஹிமஹுல்லாஹ்.

இமாம் திர்மிதி ஹஜ்ரத் அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ரிவாயத்தைப் பதிவு செய்துள்ளனர்..

"قال رسول الله صلى الله عليه وسلم في قوله تعالىٰ
عسىٰ ان يبعثك ربك مقاما محمودا أو سئل عنها قال هي الشفاعة، هذا
حديث حسن، جامع الترمذي: ابواب التفسير: باب تفسير سورة بني
اسرائيل-

மகாமே மஹ்மூத் (பற்றிய வசனத்தைப் பற்றி, மகாமே மஹ்மூதைப்) பற்றி பெருமானாரிடம் வினவப்பட்டபோது அது ஷஃபாஅத் (பரிந்துரை) என்றனர்.

இக்கருத்தை ஹாஃபிள் இப்னு ஹஜர் ரஹிமஹுல்லாஹ்.. ஹழ்ரத் இப்னு அப்பாஸ். ஹழ்ரத் ஹுதைபா, ஹழ்ரத் முஜாஹித், ஹழ்ரத் கதாதா, இமாம்

*ஹஸன்பசரீ, இப்னு அபீ நஜீஹ், இப்னு ஜரீர் (ரழியல்லாஹு அன்ஹும்) ஆகியோர் கூறியதாக ரிவாயத் செய்துள்ளனர். - தப்சீர் இப்னு கஸீர்.*

## ஷஃபாஅத் பற்றி ஹதீஸ்கள்

*ஹழ்ரத் அபூமூஸா அஷ்அரீ ரழியல்லாஹு அன்ஹு ரிவாயத் செய்கிறார்கள்.*

"قال رسول الله صلى الله عليه وسلم خيرت بين الشفاعة و بين ان يدخل نصف امتى الجنة فاخترت الشفاعة لانها أعم و اكفى اترونها للمتقين لا و لكنها للمذنبين الخطائين المتلوثين.

*ரசூலுல்லாஹி சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் கூறினார்கள். எனக்கு ஷஃபாஅத்திற்கும் என் உம்மத்தில் பாதியை சுவனபதியில் நுழையச் செய்வதற்குமிடையில் (இரண்டில் ஒன்றை) தேர்வுசெய்ய விருப்பமளிக்கப் பட்டது. நான் ஷஃபா அத்தைத் தேர்வுசெய்தேன்.. ஏனெனில் இது பொதுவானது. மேலும் போதுமானதாகும். ஷஃபாஅத் பயபக்தி உடையவர்களுக்கென்று கருதுகின்றீர்களா? இல்லை அது வெறுக்கத்தக்க தவறிழைக்கக்கூடிய பாவிகளுக்காகும். - இப்னுமாஜா, அஹ்மத், இப்னு ஹிப்பான்.*

இதை ஹாகிமில் அவ்ஃப் பின் மாலிக் அவர்களிடமிருந்து ரிவாயத் செய்யப்பட்டுள்ளது.

شـفـاعتى لمن شهد ان لا اله إلا الله مخلصاً يصدق قلبه لسانه و لسانه قلبه

பெருமானாரிடம் ஷஃபாஅத் பற்றி கேட்கப்பட்டபோது கூறினார்கள். எவரது நாவு கூறுவதை இதயம் மெய் என்கிறதோ மேலும் இதயம் கூறுவதை நாவு மெய்ப்படுத்துகிறதோ அத்தகைய பரிசுத்த மன(எண்ண)த்தோடு லாஇலாஹ இல்லல்லாஹ் (அல்லாஹ்வையன்றி இறைவன் இல்லை) என சாட்சியமளித்தவருக்கு என் பரிந்துரை உண்டு.

- அஹ்மத், ஹாகிம்.

இதே ஹதீஸை இமாம் திர்மித் அவ்ஃப் பின் மாலிக் அவர்களிடமிருந்து ரிவாயத் செய்துள்ளனர். அதில் “அல்லாஹ்விற்கு இணை வைக்காது மரணித்த ஒவ்வொருவருக்கும் என் ஷஃபாஅத் உண்டென்று” வருகிறது.

உம்முல் முஃமினீன் சய்யிதஹ் உம்மு ஹபீபா ரழியல்லாஹுஅன்ஹா ரிவாயத் செய்கின்றனர். நாயகம் சல்லல்லாஹுஅலைஹி வசல்லம் அன்னவர்கள் கூறினார்கள்..

اريـت مـا تـلقى امتى بعدى و يسفك بعضهم دماء بعض و سبـق ذلك مـن الله كـمـا سبـق فـى الامم قبلكم فينبغى ان يولينى شفاعته يوم القيامة فيهم ففعل

*எனக்குப்பின் என் உம்மத்தினர் சந்திக்கப் போகும் பிரச்சினைகளை மேலும் (எனக்குப் பின்) ஒருவருக்கொருவர் ரத்தம் ஓட்டுவதை எனக்கு காட்டப்பட்டது. இவையெல்லாம் அல்லாஹ்வின் விதியாகும். உங்களுக்கு முன்புள்ள சமுதாயங்களில் நிகழ்ந்ததைப் போலவே. ஆகவே கியாமநாளில் அவர்கள் விஷயத்தில் எனது ஷஃபாஅத் முக்கியமானதாகும். அல்லாஹ் அவ்வாறே செய்தான்.*

*- அல் முஃஜமுல் அவ்ஸத்.*

*ஹழ்ரத் அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள். நாயகம் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் கூறினார்கள்.*

"لكل نبى دعوة يدعوبها و اختبأت دعوتى شفاعة لامتى يوم القيامة

*ஒவ்வொரு நபிக்கும் முழு அங்கீகாரத்திற்குரிய ஒரு துஆ உண்டு. நான் (அதை) கியாம நாளில் என் உம்மத்திற்கு ஷஃபாஅத் (பரிந்துரை) செய்வதற்காக வைத்துக் கொண்டேன்.*

*- புகாரி, முஸ்லிம், அஹ்மத், பஜ்ஜார், பைஹகீ.*

قال اهل العلم معناه دعوة أعلم انها تستجاب لهم و يبلغ فيها مرغوبهم و إلا فكم لكل نبى منهم من دعوة مستجابة و لنبينا صلى الله عليه وسلم منها ما لايُعد لكن حالهم عند الدعا بها بين الرجاء و الخوف و ضمنت لهم اجابة دعوة فيما شاؤا يدعون بها على يقين من الاجابة

*நபிமார்களின் அந்த ஒரு துஆ பற்றி உலமாக்கள் விளக்கமளித்துள்ளனர். அதாவது அது ஒப்புக் கொள்ளப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்ட துஆ வாகும். எனினும் பொதுவாகவே நபிமார்களின் பிரார்த்தனைகள் அங்கீகாரத்திற்குரியவைதான். அவ்வாறு நமது நாயகம் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்களின் துஆக்கள் அங்கீகரிக்கப்பட்டதை நாம் ஏராளமாக வரலாற்றில் காண்கிறோம். எனினும் அந்த துஆக்களை ஏற்கப்பட வேண்டும் என்ற ஆதரவோடும், இறையச்சத்தோடும் கேட்டுள்ளனர். எனினும் அவர்களுக்கு முழு அங்கீகாரம் வழங்கப்பட்ட அந்த ஒரு துஆவை ஏற்கப்பட்டேயாகும் என்ற உறுதியோடு கேட்பதாகும்.*

*ஹழ்ரத் உமர் பின் கத்தாப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் குத்பாவில் கூறினார்கள்.*

سيكون فى هذه الأمة قوم يكذبون بالرحم و بالدجال و يكذبون بطلوع الشمس من مغربها و يكذبون عذاب القبر و يكذبون بالشفاعة و يكذبون بقوم يخرجون من النار بعد ما امتحشوا.

*இந்த உம்மத்தில் ஒரு கூட்டம் இரக்கம் காட்டப்பட மாட்டார். தஜ்ஜால் வரவை ஏற்கமாட்டர். மேலும் சூரியன் மேற்கில் உதயமாவதை மறுப்பர். மேலும் கப்ர் வேதனையை மறுப்பர். இன்னும் ஷஃபாஅத்தை மறுப்பர். மேலும் நரகில் நுழைந்தபின் (நபியவர்களின் ஷஃபாஅத்தால்) பலர் நரகிலிருந்து வெளியாக்கப்படுவர் என்பதை மறுப்பர்.*

*- அல்பதூருஸ்ஸாஃபிரா இமாம் சுயூத்தி.*

*இமாம் சுயூத்தி அவர்களும், இமாம் பைஹகீ அவர்களும் ஹழ்ரத் அனஸ் பின் மாலிக் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ரிவாயத்தைப் பதிவு செய்துள்ளனர்..* من كذب الشفاعة فلانصيب له و من كذب الحوض فليس له فيه نصيب

*“யார் ஷஃபாஅத்கை மறுப்பாரோ அவர் துர்பாக்யசாலி. மேலும் ஹவ்ழ் நீர் தடாகத்தை மறுப்பவரும் துர்பாக்கியசாலி யாவார்.”*

*பஜ்ஜார், தப்ரானி, அபூநயீம் ஆகியவற்றில் வரும் ஹழ்ரத் அலிபின் அபூதாலிப் ரழியல்லாஹு*

அன்ஹு அவர்களின் ரிவாயத்.. நாயகம் சல்லல்லாஹு அலைஹி வ சல்லம் அன்னவர் கூறினார்கள்.

"اشفع لأمتى حتى يناديني ربى عز و جل فيقول ارضيت يا محمد فأقول نعم رضيت

என் ரப்பு என்னை அழைத்து முஹம்மதவர்களே. திருப்தியடைந்து விட்டீர்களா? எனக் கேட்கும் போது ஆம். திருப்தியடைந்து விட்டேன் எனக் கூறும்வரை நான் என் உம்மத்திற்காக ஷஃபாஅத் செய்வேன்.

ஹஜ்ரத் அனஸ் பின் மாலிக் ரழியல்லாஹு அன்ஹு ரிவாயத் செய்கின்றனர். நாயகம் சல்லல்லாஹு அலைஹி வ சல்லம் அவர்கள் கூறினார்கள்..

شفاعتى لأهل الكبائر من امتى

என் பரிந்துரை என் உம்மத்தின் பெரும்பாவிகளுக்கு(ம்) உண்டு.

-அபூதாவூத், திர்மித், ஹாகிம் பைஹகீ.

ஹஜ்ரத் இப்னு உமர் அறிவிக்கின்றனர். நாயகம் சல்லல்லாஹு அலைஹி வ சல்லம் கூறினார்கள்..

"اول من اشفع له من امتى اهل بيتى ثم الاقرب فالاقرب من قريش و الانصار ثم من آمن بى و اتبعنى من اهل اليمن ثم سائر العرب ثم الأعاجم و اول من اشفع له اولو الفضل

நான் முதலில் என் குடும்பத்தினருக்கு (அஹ்லுபைத்களுக்கு) பரிந்துரை செய்வேன். பின்

படிப்படியாக குறைஷிகளில் மிக நெருக்கமானோருக்காக, பின் அன்சாரிகளுக்காக, பின் யமன் வாசிகளில் என்னை ஈமான் கொண்டு, என்னைப் பின்பற்றியோருக்காக, பின் அரபிகளுக்காக, பின் அரபிகளல்லாதவர்களுக்காக, மேலும் நான் முதன் முதலில் சிறப்புக்குறியோருக்கு பரிந்துரை செய்வேன்.
- முஃஜமுல் கபீர்.

நாயகம் சல்லல்லாஹு அலைஹி வ சல்லம் அவர்கள் கூறினார்கள்..

اول من اشفع له من امتى اهل المدينة ثم اهل مكة ثم اهل الطائف

நான் என் உம்மத்தில் முதலில் மதீனா வாசிகளுக்காக பின் மக்காவாசிகளுக்காக பின் தாயிஃப் வாசிகளுக்கு பரிந்துரை செய்வேன் - முஃஜமுல் அவ்ஸத்.

## ஷஃபாஅத்தை நஸீபாக்கும் நற்செயல்கள்

என்னென்ன நற்செயல்கள் செய்வதால் நாயகம் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அன்னவர்களின் மேலான ஷஃபாஅத்தைப் பெறமுடியும் என ஏராளமான விஷயங்கள் ஹதீஸ்களில் வந்துள்ளன.

ஹழ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கின்றனர். நாயகம் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் நவின்றார்கள்.

من قال حين يسمع النداء اللهم رب هذه الدعوة التامة و الصلاة القائمة آت محمدا الوسيلة و الفضيلة و ابعثه مقاماً محمودا الذى وعدته، حلت له شفاعتى يوم القيامة

- *எவர் பாங்கு சொல்லக் கேட்டபின் "அல்லாஹு ம்ம ரப்ப ஹாதி ஹித்தஃவதித் தாம்மதி வஸ் ஸலாத்தில் காயிமதி ஆ(த்)தி முஹம்மதனில் வஸீலத வல் ஃபழிலத்த வப் அஸ் ஹு மகாமம் மஹ்மூதனில்லதீ வஅத்தஹு" என்று ஓதினால் அவருக்கு கியாம நாளில் என் பரிந்துரை நிச்சயமாகி விட்டது.*

  *- புகாரி*

  *இதே போன்று முஸ்லிமிலும் ரிவாயத் செய்யப்பட்டுள்ளது.*

- *பெருமானார் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அன்னவர்கள் கூறினார்கள்.*

**من زار قبری وجبت له شفاعتی**

*யார் எனது கப்ரை ஜியாரத் செய்தாரோ அவருக்கு என் ஷஃபாஅத் கட்டாயமானது.*

*- தார குத்னீ, பைஹகீ.*

- *ஹழ்ரத் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக்கிறன்றனர்.. நாயகம் சல்லல்லாஹு அலைஹி வ சல்லம் கூறினார்கள்..*

**"من جاءني زائرا لا يعلمه حاجة إلا زيارتي كان حقا عليّ ان اكون له شفيعا يوم القيامة" (۱)**

என்னை ஜியாரத் செய்வதன்றி வேறு நோக்கமின்றி என்னிடத்தில் வந்தால் அவருக்காக கியாம நாளில் பரிந்துரை செய்யவேண்டியது என்மீது கடமை.

*- அல்முஃஜமுல் கபீர்.*

❖ சஃதுபின் அபீவக்காஸ் ரழியல்லாஹு அன்ஹு கூறினார்கள். பெருமானார் சல்லல்லாஹு அலைஹி வ சல்லம் அன்னவர்கள் புனித மதீனா பற்றிக்கூறினார்கள்..

"لايثبت احـد على لأوائها و جهدها إلا كنت له شفيعاً أو شهيدا يوم القيامة"(٢)

எவர் மதீனாவின் கடுமையான பசிக்காலங்களிலும் உறுதியோடு இருந்தாரோ அவருக்காக நான் கியாம நாளில் பரிந்துரை செய்வேன் அல்லது சாட்சியாக இருப்பேன் - முஸ்லிம்.

❖ ஹழ்ரத் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹுமா கூறினார்கள். நாயகம் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் கூறினார்கள்.

"من استطـاع منكم ان يموت بالمدينة فليمت بالمدينة فانى اشفع لمن مات بها"

உங்களில் எவருக்கு மதீனாவில் மரணம் வரச் சாத்தியமோ வரட்டும். ஏனெனில் நான் மதீனாவில் மரணித்தவருக்காக பரிந்துரை செய்வேன். - திர்மிதி, இப்னுமாஜா, இப்னுஹிப்பான், பைஹகீ.

❖ நாயகம் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அன்னவர்களின் ஹதீஸை இமாம் தப்ரானி அல்முஃஜமுல் கபீரில் ரிவாயத் செய்துள்ளனர்..

"من مات فى احد الحرمين استوجب شفاعتى و كان يوم القيامة من الآمنين"(٢)

யார் இரு ஹரம் ஷரீப்களில் ஒரு இடத்தில் மரணித்தாரோ அவருக்கு என் ஷஃபாஅத் உறுதியானது. அவர் கியாம நாளில் அச்சமற்றவராக இருப்பார்.

❖ இமாம் பைஹகீ ஹழ்ரத் அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ரிவாயத்தைப் பதிவு செய்கின்றனர். நாயகம் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் கூறினார்கள்..

"من مات فى احد الحرمين استوجب شفاعتى و كان يوم القيامة من الآمنين" (٢)

ஜும்ஆ நாளில், ஜும்ஆ (நாள்) இரவில் என்மீது அதிகம் சலவாத் ஓதுங்கள். யார் அவ்வாறு செய்தாரோ அவருக்கு நான் (கண்கண்ட) சாட்சியாகவும், மேலும் கியாம நாளில் பரிந்து செய்பவராகவும் இருக்கிறேன்.

❖ இமாம் தப்ரானீ ஹழ்ரத் அபுத்தர்தா ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ரிவாயத்தைப் பதிவு செய்துள்ளனர். நாயகம் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் கூறினார்கள்.

من صلى على حين يصبح عشرا و حين يمسى عشرا ادركته شفاعتى يوم القيامة

யார் என் மீது காலை 10 முறையும், மாலை 10 முறையும் சலவாத் ஓதினாரோ அவர் கியாம நாளில் என் பரிந்துரைக்கு உரிமை பெற்றவராவார்.

# மலக்குகள், வலிமார்கள், ஆலிம்கள், நல்லோர்களின் ஷஃபாஅத்

❖ *நாயகம் சல்லல்லாஹு அலைஹி வ சல்லம் அவர்கள் நவின்றதாக ஹழ்ரத் உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கக்கூடிய ஹதீஸ்.. இப்னு மாஜா, பைஹகீயில் பதிவு செய்யப்பட்டுள்ளது..*

يشفع يوم القيامة ثلاثة الانبياء ثم العلماء ثم الشهداء.

*"கியாம நாளில் மூவர் பரிந்துரை செய்வர். 1.நபிமார்கள், 2.ஆலிம்கள், 3.(இறை வழியில் மரணித்த) ஷஹீதுகள்."*

❖ *நாயகம் சல்லல்லாஹு அலைஹி வ சல்லம் அன்னவர்கள் கூறியதாக ஹழ்ரத் அபுத்தர்தா ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்..*

يشفع الشهيد فى سبعين من اهل بيته

*ஷஹீத் தன் குடும்பத்திலுள்ள 70 நபர்களுக்கு பரிந்துரை செய்வார்*

*அஹ்மத், தப்ரானீ, இமாம் திர்மிதி மற்றும் இமாம் இப்னுமாஜா ஆகியோரின் பதிவுகளிலும் இந்த அர்த்தத்தில் ஹதீஸ்கள் உள்ளன.*

❖ *இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்*

يقال للعالم اشفع فى تلاميذك و لو بلغ عددهم نجوم السماء

நட்சத்திரங்களின் எண்ணிக்கையளவு இருந்த போதிலும் (சரி) உங்களின் மாணவர்களுக்காக ஷஃபாஅத் செய்வீர் என ஆலிம்களுக்குக் கூறப்படும் - தைலமீ

❖ பெருமானார் சல்லல்லாஹு அலைஹி வ சல்லம் அன்னவர்கள் கூறியுள்ளார்கள்..

يدخل الجنة بشفاعة رجل من امتى اكثر من بنى تميم

என் உம்மத்தின் ஒரு நபரின் பரிந்துரையால் பனு தபீம் கிளை யாரைவிட அதிகமானோர் சுவனம் புகுவர்.

- திர்மிதி, பைஹகீ.

இமாம் அபூ யஃலா, பைஹகீ ஆகியோர் ஹழ்ரத் அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ரிவாயத்தைப் பதிவு செய்கிறார்கள். அண்ணல் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அவர்கள் கூறினார்கள்.. ஒரு வணக்கசாலியும், ஒரு பாவியும் ஒரு காட்டிற்குச் சென்றனர். வணக்கசாலி தாகத்தால் மயக்கமுற்றார். பாவியிடம் தண்ணீர் இருந்தது. தான் தண்ணீர் தராது இவர் இறந்துவிட்டால் அது தமக்கு அல்லாஹ்விடம் பெரும் துர்பாக்கியமாகிவிடும். ஆனால் இருக்கும் நீரை இவருக்கு கொடுத்து விட்டால் நாம் தாகத்தால் இறக்க நேரிட்டால் என்னாவது? என்றெல்லாம் யோசித்து பிறகு அந்தபாவி அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து அந்த வணக்கசாலிக்கு இருந்த நீரைக் குடிக்கத் தந்து

விட்டார். பிறகு இருவரும் அக்காட்டைக் கடந்து சென்றனர். பிறகு நாயகம் கூறினார்கள்.. கியாம நாளில் பாவி அந்த கேள்வி, கணக்கு விசாரிக்கப்பட்டு நரகில் அனுப்பும்படி உத்தரவிடப்படுவார். மலக்குகள் அவரை நரகிற்குக் கொண்டு செல்வர்.

அப்போது அந்த வணக்கசாலியை இந்த பாவி கண்டு - என்னைத் தெரியவில்லையா? என்பார். அந்த வணக்கசாலி நீர்யார்? என்பார் அதற்கவர் அன்றொரு நாள் அந்தக் காட்டில் உமக்கு நீர் புகட்டினேனே! என்பார். அப்போது அவர் மலக்குகளிடம்.. கொஞ்சம் இருங்கள் என்று கூறிவிட்டு அல்லாஹ்விடம் சென்று.. யா அல்லாஹ் அன்றிவர் எனக்கு கருணை காட்டியது போல இன்றவருக்கு நீ கருணை புரிந்து நரகிலிருந்து விடுவிப்பாயாக! என்று பரிந்துரை கோருவார். அல்லாஹ்வும் மன்னித்ததாக அறிவிப்பான். உடனே அந்த வணக்கசாலி வந்து இந்த பாவியின் கரம்பற்றி சுவனபதிக்கு அழைத்துச் செல்வார்.

இதுபோன்ற பல ரிவாயத்துகள் பல கிதாபுகளிலும் இடம் பெற்றுள்ளன.

இப்னு அபுல் ஆஸ், அபூ நயீம் ஆகியோர் ரிவாயத் செய்துள்ளனர்..

**"ليـــوفيهـــم اجـورهـم و يـزيدهم من فضله"**

"அவர்களுக்கு (கியாம நாளில்) அவர்களின் கூலி பரிபூரணமாகக் கொடுக்கப்படும். மேலும் அல்லாஹ் தன் அருளால் கூடுதலாக(வும்)

வழங்குவான்'' என்ற வசனத்திற்கு நாயகம் சல்லல்லாஹு அலைஹி வ சல்லம் அன்னவர்கள் விளக்கமளித்தார்கள்.

"اجـورهـم يـدخـلهـم الجنة و يزيدهم من فضله الشفاعة لمن وجبت له الشفاعة لمن صنع اليهم المعروف فى الدنيا"(٣)

''அவர்களுடைய கூலி அவர்களை சுவனத்தில் பிரவேசிக்கச் செய்வது மேலும் அவர்களுக்கான கூடுதல் என்பது உலகில் அவர்களோடு நற்காரியம் புரிந்தோருக்கு அச்சுவனவாசிகள் பரிந்துரை செய்வதாகும்.''

عـن ابـى مـوسىٰ الاشعرى ان النبى صلى الله عليه وسـلم قال الحاج يشفع فى اربع مائة من اهل بيته

அபூ மூஸா அஷ்அரீ ரழியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்.. நபி சல்லல்லாஹு அலைஹி வ சல்லம் அன்னவர்கள் கூறினர்.. ஹாஜி (யார்) தன் குடும்பத்தில் 400 நபர்களுக்கு பரிந்துரை செய்வார்.

- பஜ்ஜார்.

நபிபெருமானார் சல்லல்லாஹு அலைஹி வசல்லம் அன்னவர்கள் கூறினார்கள்..

مـا مـن مسـلمين يموت لهما ثلاثة اطفال لم يبلغوا الحنث إلا جيئ بهـم حتـى يـوقـفـوا عـلـى باب الجنة فيقال لهم ادخـلـوا الـجـنة فيقولون أندخل و لم يدخل أبوانا فقال لهـم فـلا أدرى فـى الثـانية أو الثـالثة أدخـلـوا الجنة و ابواكم.

முஸ்லிம்களில் எவருக்கு பருவமடையாத மூன்று குழந்தைகள் மரணித்து விட்டனரோ அம்மூவரும் சுவன வாசலில் நின்று கொள்வர். அவர்களை சுவனத்தில் நுழையும்படி

கூறப்படும்போது.. எங்கள் பெற்றோர் இல்லாமல் நாங்கள் எப்படி சுவனம் நுழைய முடியும்? என்று கேட்பார்கள். அப்போது உங்கள் பெற்றோருடன் சேர்ந்து சுவனத்தில் நுழையுங்கள் எனப்படும். இதை நாயகம் இருமுறை கூறினரா அல்லது மூன்று முறை கூறினரா என்பது தெரியவில்லை. - முஸ்னத் இஸ்ஹாக் பின் ராஹவிய்யா.

عن أبى امامة عن النبى صلى الله عليه وسلم قال ذرارى المسلمين يوم القيامة تحت العرش شافعين و مشفعين

அண்ணலார் கூறியதாக அபூ உமாமா ரழியல்லாஹு அன்ஹு கூறினார்கள்..

குழந்தை(ப்பருவத்தில் மரணமடைந்தவர்)கள் அர்ஷுக்குக் கீழே நின்று கியாம நாளில் பரிந்துரை செய்வார்கள். அவர்களது பரிந்துரை ஏற்கப்படும்.

- அபூ நயீம்.

عن عبد الله بن عمرو ان رسول الله صلى الله عليه وسلم قال الصيام و القرآن يشفعان للعبد يوم القيامه يقول الصيام اى رب منعته الطعام و الشهوات بالنهار فشفعنى فيه و يقول القرآن منعته النوم بالليل فشفعنى فيه قال فيشفعان

நாயகம் நவின்றதாக இப்னு அம்ர் ரழியல்லாஹு அன்ஹு கூறினார்கள்..

நோன்பு, குர்ஆன் கியாம நாளில் பரிந்துரை செய்வன. நோன்பு கூறும்.. நான் அவரை உண்ணாது, இச்சை கொள்ளாது தடுத்துவைத்தேன். யா அல்லாஹ் என் பரிந்துரையை ஏற்பாயாக. குர்ஆன் கூறும்.. நான்

அவரை தூக்கத்தை விட்டும் தடுத்தேன். என் பரிந்துரை ஏற்பாய்! அவற்றின் பரிந்துரை ஏற்கப்படும்.

- அஹ்மத்.

عن عبد الله بن مسعود رضى الله عنه قال لاتزال الشفاعة بالناس و هم يخرجون من النار حتى ان ابليس ليتطاول لها رجاء ان تصيبه.

இப்னுமஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு கூறியுள்ளார்கள். மக்கள் பரிந்துரைக்கப்பட்டு நரகிலிருந்து வெளியேற்றப்பட்டுக் கொண்டேயிருப்பர். எந்தளவெனில் நமக்கும் (யாராவது) பரிந்துரைக்கலாம் என இப்லீசே நினைப்பான்

- தப்ரானீ.